Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

# நாட்டுப்புற இலக்கியம் உணர்த்தும் சிற்பக்கலை வடிவங்கள்

**முனைவர். கு. சந்திரன்**
**உதவிப்பேராசிரியர் தமிழ்த்துறை**
**மன்னர் சரபோசி அரசுக் கலைக்கல்லூரி (தன்னாட்சி)**
**தஞ்சாவூர் - 613 005**

35

**சிற்பக்கலை வரலாறு**

முன்னுரை

கட்டிடக்கலைக்கு அடுத்ததாக உள்ளது சிற்பக்கலை. கட்டக் கலையை விட சிற்பக் கலை நுட்பமானது. சிற்பக்கலை பண்டைத் தமிழரால் வளர்க்கப் பெற்ற வளர்ந்த கலைகளுள் ஒன்று, பண்டுதொட்டு தமிழகத்தில் சிறப்பாக வளர்ந்து வரும் நுண்கலைகளுள் சிற்பக்கலையும் ஒன்று. மனிதன், விலங்கு, பறவை, மரம், செடி, மலை, கடல் முதலிய இயற்கை உருவங்களையும் கடவுள், தெய்வம், தேவர், அரக்கர் முதலிய கற்பனை உருவங்களையும் அழகுபட அமைப்பதே சிற்பக்கலையாகும். சங்க காலத்தில் சிற்பக் கலைக்கிருந்த சிறப்பினை அக்கால இலக்கியங்கள், புதைபொருள் ஆய்வில் ஆகியவற்றால் நன்கறியலாம்.

**சிற்பம் அமைக்கும் பொருள்கள்**

மெழுகு அரக்கு சுதை, மரம், தந்தம், கல், பஞ்சலோகம் முதலியவைகளினால் சிற்ப உருவங்கள் அமைக்கப்படுகின்றன.

கல்லும் உலோகமும் செங்கலும் மரமும்
மண்ணும் சுதையும் தந்தமும் வண்ணமும்
கண்ட சருக்கரையும் மெழுகும் என்றிவை
பத்தே சிற்பத் தொழிற்குறுப் பாவன[1]

எனது சிற்பத் தொழிலுக்குண்டான பொருள்களைக் கூறுகிறது திவாகர நிகண்டு.

**இலக்கியங்களில் சிற்பக்கலை**

பண்டைத் தமிழரின் சிற்பக் கலைத்திறனை உணர்த்தும் செய்திகள் சங்கத் தொகை நூல்களில் காணப்படுகின்றன. அக்காலத்தில் ஐவகைச் சிற்பங்களாக மண்சிற்பம், மரச்சிற்பம், சுதைச் சிற்பம், தந்தச் சிற்பம் ஆகியவை விளங்கின. கட்டிடத்திற்குப் பயன்படுத்திய மண், மரம், செங்கல் ஆகியவற்றைச் சிற்பங்களுக்கும் பயன்படுத்தியுள்ளனர்.

வழுவறு மரனும் மண்ணும் கல்லும்
எழுதிய பாவையும்
மண்ணினும் கல்லினும் மரத்தினும் கவரினும்
கண்ணிய தெய்வதம் காட்டுநர் வகுக்க[2]

என்று கூறும் மணிமேகலை அடிகளினின்று சங்க காலத்தில் மண்ணிலும், மரத்திலும், கல்லிலும்,

கதையிலும் சிற்பங்கள் அமைத்தமை விளங்குகின்றது.

நமது கோயில்களிலே சிற்பக்கலை பெரிதும் இடம் பெற்றிருக்கிறது. சிற்ப உருவங்கள் அமையாத கோயிற் கட்டடங்கள் இல்லை என்று கூறலாம். கோயிலின் தரை, சுவர், சிகரம், கோபுரம், மண்டபம், தூண்கள், வாயில் நிலைகள் முதலிய கட்டடங்களின் எல்லா இடங்களிலும் சிற்ப உருவங்கள் அமைந்துள்ளன.

காவிரிப்பூம்பட்டினத்திலிருந்த மாளிகைளிலே, சுதையினால் செய்யப்பட்ட சிற்ப உருவங்கள் அமைக்கப்பட்டிருந்ததை இந்திர விழாவின் போது அந்நகரத்திற்கு வந்த மக்கள் கண்டு களித்ததை மணிமேகலை நூல் கூறும்.

வம்ப மாமக்கள் கம்பலை மூதூர்
கடுமண் ஓங்கிய நெடுநிலை மனைதொறும்
மையறு படிவத்து வான்வர் முதலா
எவ்வகை உயிர்களும் உவனங்காட்டி
வெண்கதை விளக்கத்து வித்தகர் இயற்றிய
கண்கவர் ஓவியங்கண்டு நிற்குநரும்[3]

என்ற இவ்வரிகளின் மூலம் அறிய முடிகிறது.

**மண் சிற்பங்கள்**

மண்ணால் சிற்பங்களைச் செய்யும் முறை பழங்காலத்தில் மிகுதியாக இருந்தது. அவற்றைச் செய்தோர் மண்ணீட்டாளர் என்றும் பெரால் குறிக்கப்பெற்றனர். மண்ணாலான சிற்பங்கள் பழங்காலத்தில் மிகவும் போற்றப்பட்டு வந்தன. மண்ணையிட்டுச் செய்யப்பட்டவையாதலின் அவற்றிற்கு மண்ணீடு என்னும் பெயரும் வழங்கப்பட்டது. இத்தகைய மண்ணாலான சிற்பங்கள் பல காவிரிப்பூம்பட்டினம் உறையூர், காஞ்சி, அரிக்கமேடு, கொற்கை முதலிய இடங்களில் மேற்கொள்ளப்பெற்ற அகழ்வாய்வுகளில் பண்டைய சுடுமண் சிற்பங்கள் கிடைத்துள்ளன.

சங்கம் மருவிய காலத்திற்குப் பின்தோன்றிய காலத்தில் ஊர்த்தெய்வங்களாக வரிபடப் பெற்ற தேவதைகளுக்குப் பெரும் பெரும் மண் உருவங்களைச் செய்து வைத்தனர். பல்லவர் காலத்திலிருந்து இத்தகைய சிற்பங்கள் கிடைத்துள்ளன. அவ்வகையில் மதுரைவீரன், வேடியப்பன், சுடலைமாடன் முதலிய உருவங்களும் உயரமான அளவில் யானை, குதிரை முதலிய மண் உருவங்களும் குறிப்பிடத்தக்கன.

**சுடுமன் சிற்பங்கள்**

சுடுமண் சிற்பங்கள் செய்யும் முறையும் தமிழகத்தில் மிகுதியாகப்பின்பற்றப்பட்டுள்ளது. தேவையான உருவங்களைச் செய்வதற்கு ஏதுவாக, உள்பகுதியில் மரத்தாலான வலிய முளையொன்று வைக்கப் பெற்று, செங்கல் கம்பி ஆகியனவும் பொருத்தப் பெற்ற சுண்ணாம்புக் காரையும் மேலே சுதையும் பூசி வேண்டிய உருவங்கள் செய்யப் பெறும். அரைத்த சுண்ணாம்பு, கருப்பஞ்சாறு, வெல்லச்சாறு, நெல்லிக்காய்ச் சாறு முதலியவற்றைக் கலந்து வச்சிரம் போல் செய்து கதையினை உருவாக்கினார். தொன்மையான சுதை உருவங்கள் சில

காவிரிப்பூம்பட்டின அகழ்வாயில் கிடைத்தன. செங்கலால் கட்டப்பெற்ற பல்லவர் காலக் கோயில்களில் இத்தகு சுதை உருவங்களை அமைத்துள்ளனர்.

கொங்கு நாட்டுக் கிராமக் கோயில்களில் காணப்படும் சுடுமண் சிற்பங்களை அவற்றின் தன்மை கருதி இரண்டு வகையாகப் பிரிப்பர். அவை,

1 தெய்வங்களின் மூல உருவங்கள்

2 வேண்டுதலுக்காகச் செய்யப்படும் உருவங்கள் என்பது ஆகும்.

கண்களை அகட்டிக் கொண்டு கைகளில் ஆயுதம் ஏந்தியபடி நிற்கும் தெய்வங்களின் உருவங்கள் முதல் வகையைச் சார்ந்தவை. மிகப்பெரிய உருவங்களும் அவற்றிற்கேற்ற குதிரைகளும் மண்ணால் செய்து வைக்கப்படுகின்றன. முனியப்பன் போன்ற வீரச் செயல்களுடன் தொடர்புடைய தெய்வங்களுக்கே இத்தகைய உருவங்கள் செய்யப்படுகின்றன. இவையன்றி மிகச் சிறிதாகப் பூசை செய்வதற்கேற்ற வகையில் கல்லாலோ, மண்ணாலோ ஆன ஓர் உருவம் நடுவில் வைக்கப்பட்டிருக்கும். இதுவே மூல உருவமாகும். பொதுவாக மண்ணால் செய்யப்படும் உருவங்கள் கிராமக் கலையைச் சார்ந்தவையாகும். கொங்கு நாட்டுச் சுடுமண் சிற்பங்கள் மக்கள் இட்டு வழங்கும் பெயர்களின் அடிப்படையில் நான்காக அமைகின்றன. அவை,

1 உரு அல்லது உருவு

2 பசு அல்லது பசுவு

3 வேட்டை

4 குதிரை

என்பன ஆகும். வேண்டுதல்களுக்காகச் செய்யப்படும் உருவங்களாக இவை அமைகின்றன.

**உரு அல்லது உருவு**

மனிதர்களுக்கு வரும் நோய்கள் நீங்கவும் நோய்கள் வராமல் பாதுகாக்கவும் வேண்டுதலின் பேரில் வந்து வைக்கப்படும் உருவங்கள் உரு அல்லது உருவு எனப்படுகின்றன. இவை மனித உருவங்கள் ஆகும். இவற்றை உருவாரம் என்றும் அழைப்பர். குறிப்பிட்ட மனிதர்களைப் போன்ற உருவங்களைச் செய்வதில்லை. பொதுவாக ஆண், பெண் உருவங்கள் என்று வேறுபடுத்திப் பார்க்கும் அளவில் மட்டும் இவை அமைகின்றன. பெரும்பாலும் குழந்தைகளைக் காக்க வேண்டி குழந்தை போன்ற உருவுகள் செய்யப்படுகின்றன. சிறுவர், சிறுமியர்களின் உருவுகளும் பெரியவரிகளின் உருவுகளும் செய்து வைப்பதுண்டு. இவ்வுருவுகள் கிராம தெய்வங்களைப் போன்றே கண்களை உருட்டி விழித்துக் கொண்டு கையில் கத்தியைப் பிடித்தபடி செய்யப்படுகின்றன. (பெருமாள், முருகன், கொங்கு நாட்டியல், ப.98)

**பசு அல்லது பசுவு**

மாடு, எருமை இவற்றிற்கு வரும் நோய்களைப் போக்கவும் அவை செழிப்பாக வளரவும் வேண்டிச் செய்யப்படும் உருவங்கள் பசு அல்லது பசுவு என்று அழைக்கப்படுகின்றன.

**வேட்டை**

நாய்களுக்கு ஏற்படும் நோய்களைக் குணப்படுத்தவும் அவற்றிற்கு நோய்கள் வராமல்

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

இருக்கவும் வேண்டிச் செய்து வைக்கப்படும் உருவங்கள் வேட்டை என்று அழைக்கப்படுகின்றன. நாய்களுக்கு புராதனப் பெயர் வேட்டை என்பதாகும்.

**குதிரை**

தெங்வங்களின் வாகனம் குதிரை, கிராமத் தெய்வங்கள் பெரும்பாலும் மக்களுக்கான போராட்டத்தில் உயிர் நீத்த வீரர்களாகவே இருக்கின்றனர். இவர்கள் போரில் உயிர்நீத்த காரணத்தால் குதிரைகள் வாகனமாக்கப்பட்டுள்ளன. குதிரைகளின் மீதேறி இத்தெய்வங்கள் இரவுகளில் மக்களைக் காவல் புரிகின்றன என்ற நம்பிக்கையில் தெய்வத்திற்குத் தேவைப்படும் வாகனமாகிய குதிரையின் உருவத்தினைச் செய்து வைக்கின்றனர்.

இத்தகைய கடுமண் சிற்பங்கள் பலராலும் வணங்கப்படும் முனியப்பன், மாரியம்மன் போன்ற பொது தெய்வங்களுக்கே வைக்கப்படுகின்றது. தனிப்பட்ட குடும்பத்தினர் வணங்கும் தெய்வங்களுக்கோ குல தெய்வங்களுக்கோ வைக்கப்படுவதில்லை.

**இருவகைச் சிற்பங்கள்**

சிற்பங்களைப் பொதுவாக **முழுச்சிற்பங்கள் புடைப்புச்சிற்பங்கள்** என இருவகையாகப் பகுப்பர். சிலையை தனிக்கல்லில், முழுவதுமாக வடிப்பது முழுச் சிற்பமாகும். இதன் மூலம் சிலையின் முன்புறம், பின்புறம் ஆகிய முழுத் தோற்றத்தையும் காண முடிகிறது. சிலையில் முன்புறம் மட்டும் புலப்படுமாறு சுவர்களின்ல பதிந்திருப்பது போலச் செதுக்கப் பெறும் சிற்பங்கள் படைப்புச் சிற்பங்கள் எனப்படும். முன்னவை தனி உருவங்களாக இருக்கும். பெரும்பாலும் அவை கட்டடங்களை அழகு செய்ய சமைக்கப்பெறும். பின்னவை ஏதேனும் ஒன்றின் முது பொருத்தப் பெற்றவை போலக் காட்சியளிக்கும். பாறைகளில் செதுக்கப் பெற்ற சிற்பங்கள் இவ்வகையில் குறிப்பிடத்தக்கனவாகும்.

**சுடுமண் சிற்பங்கள் - உருவாக்கும் முறைகள்**

கிராம தேவதைகளுக்காகச் சுடுமண் உருவங்கள் உருவாக்கும் முறைகள் பற்றி குதிரையெடுப்பு என்னும் நூலில் க, ரவிக்குமார் வருமாறு விளக்குவார். பொதுவாக இவ்வகைச் சிற்பங்கள் தெய்வம் தொடர்பாக உருவாக்கப்படுவதால் செய்முறைகளில் பல்வேற நம்பிக்கைகள் சடங்கு முறைகள் கடைப்பிடிக்கப்படுகின்றன.

**மண்ணெடுத்தல்**

சாமி சிலைகள் செய்வதற்காக மண்ணெடுக்கின்ற நிகழ்ச்சி நல்ல நாள் பார்த்து நிகழ்த்தப்படுகின்றது. பொதுவாக கண்காய்களில் உள்ள கரம்பை மண்ணை எடுத்து வருவது மண்ணெடுத்து வருதல் என்று சொல்லப்படுகிறது. இவ்வாறு கண்மாயிலிருந்து எடுத்து வரப்பட்ட காய்ந்த மண்ணில் உள்ள கற்கள், குப்பை முதலிய பொருட்களை நீக்கிவிட்டு தண்ணீர் ஊற்றி ஊற வைப்பர். இதனை மண் உளப்புதல் என்று அழைக்கின்றனர். இவ்வாறு ஊற வைக்கப்பட்ட மண்ணைக் கையாலும், காலாலும் மிதித்துத் தயார் செய்வார்கள். இந்த மண்ணுடன் ஆற்றுமணல் மிதிக்கப்படும் சண்டுமண் சிலைகள், அடுப்பு, குளுமை, குளுதாடி போன்ற கடினமான பொருட்களைச் செய்யப் பயன்படுத்துவர். இதல்லாது முழுவதும் சட்டி, பானை போன்றன உருவாக்கப்படுபவையாகும். இந்த மண்ணை மணமண் என்று சொல்வர்.

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

**மண்பொம்மை உருவாக்கப் பயன்படும் முறைகள்**

வேளாண் பயன்படுத்தும் கருவிகள் மிக எளிமையானவை ஆகும். வேளாரின் மண் கலையில் அவரது கைகள் பரிதானக் கருவிகளாகும். கைகளைத் தவிர தட்டுப்பலகை, தட்டுக்கல், மண்வெட்டி, கிள்ளுக்குச்சி, வதிச்சட்டி, கடலால், கூடைப்பெட்டி, கொத்துக்கரண்டி காலுருட்டுக் கட்டை, கயிறு, மூங்கில் கவைக் கம்பு, நீளமான தென்னைமட்டை, நீளக்கம்பு, பானை, வைக்கோல், செங்கற்கள், பலகைகள், சட்டி, திருகை, வாளி, பூவரச இலை, மழைக்காகிதம், சாக்கு அம்மிக்கல், ஈச்சங்குச்சிகள், கோழி இறகுகள், விளக்குமாற்றுக் குச்சித் தூரிகை, அணில்வால் தூரிகை, சிறு துகில்கள் ஆகியவை வேளார் தம் தொழிலுக்காகப் பயன்படுத்தும் கருவிகளாக உள்ளன.

**உருவாக்கும் காலம்**

உருவங்களின் எண்ணிக்கையை வைத்து இரண்டுவாரம் முதல் நான்கு வார காலங்களில் அவை உருவாக்கப்படுகின்றன. மண் எடுப்பது முதல் வண்ணம் தீட்டுவதுவரை அனைத்து வேலைகளும் இக்கால கட்டத்திலேதான் நடைபெறுகின்றன. உருவங்களின் உருவாக்கத்தில் ஒரே நேரத்தில் பல வேலைகள் பலரால் பகிர்ந்து செய்யப்படும். ஒருவர் மதலம்பிள்ளை செய்வார். ஒருவர் குதிரைக்கதால் தயாரிப்பார் ஒருவர் மண் மிதிப்பார். இப்படிப் பல வேலைகளும் பலரால் பகிர்ந்து செய்யப்படும்.

**உருவங்களின் பாகுபாடு**

வேளார்கள் உருவாக்கும் உருவங்களைப் பெரிய உருவங்கள் சிறிய உருவங்கள் வேண்டுதல் உருவங்கள் என்று பாகுபடுத்தலாம். பெரிய உருவங்களை மிகப்பெரிய உருவங்கள் என்றும், பெரிய உருவங்கள் என்றும் பாகுபடுத்தலாம்.

**பெரிய உருவங்கள்**

மதுரை மாவட்டத்தில் குதிரையெடுப்பு எனும் விழாவிற்காகச் செய்யப்படும். பெரிய உருவங்கள் கருப்புச்சாமி, முனியாண்டிசாமி, சோணையா, வீரபத்திரசாமி, சப்பாணி, கெச்சாலி நாயக்கர் ஆகிய ஆண் தெய்வங்களும், ராக்காயி, முத்தாலம்மன், அம்மாச்சியாத்தா, செல்லாயி அம்மன், பலமரத்தாள், பட்டத்தரசி ஆகிய பெண் தெய்வங்களுமாகும். குதிரை, மாடு இவற்றையும் பெரிய உருவங்களோடு சேர்க்கலாம்.

**சிறிய உருவங்கள்**

பேச்சி, இருளாயி, கன்னிமார், ராக்காயி, ஆண்டிச்சி போன்ற பெண் தெய்வங்களும், கருப்பு, சப்பாணி, வீரபத்திரசாமி, பட்டவன், சின்னணன், முனியாண்டி, சன்னாடி, பண்டாரம், ஆண்சாமி, இருளப்பசாமி, ஐயனார் (தனித்து) ஐயனார் (மனைவியருடன்) ஆகிய ஆண் தெய்வங்களும் சிறிய உருவங்களாக உள்ளன.

**வேண்டுதல் உருவங்கள்**

குதிரைகளும், மாடுகளும் வேண்டுதல் உருவங்களோடு சேர்க்கத்தக்கவையே. இவை தவிர்த்து காளைக்கன்று, நாய்க்குட்டி, மதலம்பிள்ளை, தவழும்பிள்ளை, பாதம், கை, தலை, இடுப்பு, உடல், எலி,

நாகர், அக்கினிசட்டி, ஆயிரக்கண்ணுப்பானை, பாத்து முதலியனவும் வேண்டுதல் வடிவங்கள் ஆகும்.

**கற்சிலைகள் செய்வதற்கும் மண்சிலைகள் செய்வதற்கும் உள்ள வேறுபாடு**

கற்சிலைகளை உருவாக்கும் சிற்பக்கலைக்கும் மண்சிலைகளை உருவாக்கும் சுடுமண் மலைக்கும் அடிப்படையான வேறுபாடுகள் சில உள்ளன. அவற்றைத் தெரிந்து கொள்வது மண் உருவங்களின் உருவாக்கததைப் புரிந்து கொள்ள ஏதுவாக இருக்கும்.

1. கற்சிலைகளின் உருவாக்கம் பொதுவாக மேலிருந்து கீழ்நோக்கி நடைபெறும். அதாவது ஒரு சிற்பம் என்று எடுத்துக் கொண்டால் அதன் தலைப்பகுதியிலிருந்து ஆரம்பித்துப் பாதம் நோக்கி வேலைகள் நகரும், மண் சிலைகள் என்றால் கிழிலிருந்து மேல் நோக்கி வேலைகள் நகரும். அதாவது நகரும், அதாவது பீடத்தில் ஆரம்பித்துத் தலைநோக்கி வளரும்.

2. கல் கடினத்தன்மை வாய்ந்தது. விருப்பத்திற்கு அதன் வடிவத்தை மாற்ற முடியாது. ஆனால் களிமண்னோ அதிக நெகிழ்வுத் தன்மை உடையது. எளிதில் உலரக்கூடியது. எனவே திரும்பத் திரும்ப எளிதில் வேறுவேற உருவங்களை வடிவங்களை நினைப்பிற்கேற்றவாறு அழித்துச் செய்து கொள்ளலாம்.

3. கல் சிற்பம் ஒரு முழுமையான கல்லிலிருந்து உருவத்தைத் தேடிக் கண்டுபிடிப்பதற்கு ஒப்பானதாகும். அதாவது ஒரு கல்லில் உருவத்திற்குத் தேவை இல்லாத பகுதிகளை நீக்கிடும் போது உருவம் வெளிப்படுகிறது. மண் சிற்பமோ ஒவ்வொரு பகுதியாக ஒட்ட வைக்கப்பட்டு முழு உருவாக உருவாக்கப்படுகிறது.

4. கல் சிற்பம் செய்யப்பயன்படும் கருவிகள் இரும்பு போன்ற கடின உலோகங்களால் ஆகியனவாகும். மண் சிற்பம் உருவாக்கும் கலைஞர் பயன்படுத்தும் கருவிகளே மரக்கட்டை மண் முதலியவற்றால் செய்யப்பட்ட எளிமையான கருவிகளாகும்.

**உருவங்கள் உருவாக்கம் பற்றிய சில பொதுவான செய்திகள்**

மண் உருவங்கள் உருவாக்குவதில் சில பொதுவான தன்மைகள் தென்படுகின்றன. இவை பெரிய, சிறிய வேண்டுதல் உருவங்கள் ஆகிய அனைத்து உருவங்கள் செய்வதிலும் பொதுவாகப் பின்பற்றப்படுவன ஆகும். குதிரை, மாடு, காளைக்கன்று ஆகியவை மட்டும் இதற்கு விதிவிலக்காய் உள்ளன. இனி அவைகளைக் காணலாம்.

1. முதலில் பீடம் அமைப்பார்கள்
2. பின்னர் பாதம் வைப்பார்கள்
3. பின்னர் பீடத்தை ஒட்டிக்கால் வரை வளர்த்துவார்கள்.
4. பின்னர் இடுப்பு முதல் கழுத்து வரை வளர்த்துவார்கள்.
5. பின்னர் முகம் தலை என வளர்த்துவார்கள்.
6. பின்னர் இறுதியில் கைகள் வளர்த்தப்படும்.
7. நகைகள் முதலான அலங்கார வேலைகள் மேற்குறிப்பிட்ட பாகங்களின் வளர்ச்சியில், அடிப்படையான பகுதிகளை வடிவமைத்த பின்னரே அதன்மேல் அந்தந்தப் பகுதியில்

அமையும் நகை முதலானவற்றை வடிவமைப்பார்கள். உதாரணமாக இடுப்புப் பகுதியில் அடிப்படையான வளைவு நெளிவுகளை முதலில் வைத்துவிட்டுப் பின்னர் கச்சை கட்டியிருத்தல், மணிக்கயிறு அணிந்திருத்தல் போன்ற தோற்றமுடைய அலங்கார வேலைகளைச் செய்வார்கள். ஓவியம் தீட்டுமுன் அமைக்கும் தெளிவற்ற கோடுகளைப் போல் இதனைக் குறிப்பிடலாம். பின்னர் அக்கோடுகளின் அடிப்படையில் படம் வரைவதைப் போல மேல் வேலைப்பாடுகள் செய்வதைக் குறிப்பிடலாம்,

8. பொதுவாக இவைகள் உட்கூடாகவும், ஓட்டைகளுடனும் அமைக்கப்படும் காற்றுப் புகுந்து ஈரம் எளிதில் உணருவதற்கும், சூளைவைக்கையில் தீ பரவுவதற்கும் இவை உதவும், உட்கூடாக அமைப்பதற்க மற்றுமொரு காரணம் இவை மனிதர்களால் தோளில், தலையில் வைத்துத் தூக்கிச் செல்லப்படுவனவாகையால் கனம் அதிகரித்து விடாமல் இருப்பதற்காகவும் ஆகும்.

**கற்சிற்பங்கள்**

நடுகற்களின் வாயிலாகப் பழங்காலத்தில் கல்லில் உருவங்களை அமைக்கும் முறை இருந்ததென்பதை நன்கறிய முடிகிறது. கல்லிலே சமைக்கப் பெற்ற சிற்ப வகையில் நடுகற்சிற்பம் முதன்மையானதாகும். போரில் மடிந்த வீரனைக்குறித்து அவனுடைய உற்றார் உறவினர் நண்பர் பலர் கூடிக் கல்கெழுச்சுரத்திற்சென்று கற்கண்டு, அதனை வீரத் தெய்வமாக நாட்டி அதற்கும் பெருஞ்சிறப்புச் செய்து வழிபடுவது பண்டைத் தமிழர் மரபாகும்.

நடுகற் பீலி சூட்டி
நிலைபெறு நடுகலாகியக் கண்ணும்
இடங்கொடுத்தத் தளிப்ப மன்ற[4]

என்ற புறப்பாட்டு வரிகள் மூலம் அக்காலத்தில் நடுகற் சிற்பம் பெருவழக்காயிருந்தமையை உணர்த்துகின்றன. நடுகல்லில் வீரனது உருவத்தைச் செதுக்கி அதன் கீழே அவனது பெயரை பொறிந்து வழிபட்டதைப் போன்றே கற்பிற் சிறந்த பத்தினிக்கும் நடுகல் நாட்டிப் பத்தினித் தெய்வமாகப் போற்றி வழிபட்டனர். கண்ணகிக்குப் படிமம் அமைத்துக் கோட்டம் எழுப்பி வழிபட்டமையும், புகார் நகரத்தில் இருந்த கந்திற் பாவையும் கல்லிலே சிற்பங்கள் அமைக்கப்பட்டமைக்குச் சிறந்த சான்றுகளாகும்.

**மரச்சிற்பங்கள்**

பண்டைக்காலத்தில் மரத்தினாலும் மெல்லிய கிடையினாலும் அழகிய சிற்பங்கள் செய்யப்பட்டன. சங்க காலத்துத் தேர்களில் வியக்கத்தக்க சிற்ப வேலைப்பாடுகள் இடம் பெற்று விளங்கின. இளஞ்சேட்சென்னி என்னும் சோழ மன்னன் பல அழகிய தேர்களைக் கொண்டிருப்பதால் உருவ பஃறேர் இளங்சேட்சென்னி என்னும் பெயர் பெற்று விளங்கினான்.

**புறநானூற்றுப்பாடலில் வரும்**

வைகல் எண்தேர் செய்யும் தச்சன்

திங்கள் வலித்தகால்

என்றும் அடிகள் அக்கால சிற்பக்கலை வல்லுநர்களின் திறமையைப் புலப்படுத்துகின்றன. அக்காலத்தே சிறுவர்கள் இழுத்து விளையாடுவதற்கென்று சிறு தேர்கள் செய்யப்பட்டுள்ளன. அத்தேர்கள் மூன்று சக்கரங்கள் உடையனவாகவும் அழகிய உருவ வடிவமைப்பு உடையனவாகவும் விளங்கின.

பொற்காற் புதல்வர் புரவியின் றுருட்டும்

முக்காற் சிறுதேர்

தச்சன் செய்த சிறுமா வையம்

தச்சன் செய்த சிறுமாவையம் என்பது தச்சனால் செய்யப்பட்ட சிறிய குதிரை பூட்டப்பெற்ற வண்டி என்னும் பொருள்படுவது. இந்த வண்டியில் இதனோடு அமைக்கப்பட்ட குதிரை உருவமும், சிறுதேரும் அழகிய மரச்சிற்பங்களாகும்.

சங்க காலத்தில் சிற்ப நூல் இருந்ததாகச் சிலப்பதிகாரத்து அரங்கேற்க் காதையில் உரையாசிரியர் அடியார்க்கு நல்லார் குறித்துக் காட்டுகின்றனர். அந்த சிற்ப நூலை அறிந்த தச்சர் நுட்பமாக நூலைப் பிடித்து திசைகளை குறித்துக் கொண்டு மதில் வாயிற் கதவுகளையும், கதவு நிலைகளையும் அமைத்தார்கள். அக்கதவு நிலைக்கு மேல்குவளை மலர்களையும் பெண் யானைகளையும் திருமகளையும் சிற்பவடிவில் அழகுற அமைத்தார்கள் என்று நெடுநல்வாடையில் கூறப்படுகின்றது.

மரத்தினால் செய்யப்பட்ட சிற்பங்கள் புகார், மதுரை, காஞ்சி போன்ற பெரு நகரங்களில் இருந்தமையை வரலாறு உணர்த்துகிறது.

**தந்தச் சிற்பங்கள்**

யானைத் தந்தத்தால் சிற்பங்களைச் செய்வோர் சங்க காலத்தில் இருந்தனர். பாண்டிய அரசி படுத்திருந்த கட்டில் பல போர்களில் வெற்றி கடை முதிர்ந்த யானைத் தந்தத்தால் செய்யப் பெற்றது என்னும் நெடுநெல்வாடைச் செய்தியால் அக்காலத்தில் தந்தத்தில் அழகிய உருவங்களைச் செய்தனர் என்று அறிய முடிகிறது.

திபெத்திய நூல்கள் சிலவற்றால் தமிழகச் சிற்பியர் பலர் வட இந்தியப் பகுதிகளுக்குச் சென்று அங்குத் தமிழ்க்கலை பற்றிய நூல்களை இயற்றினார்கள். இது போல் வட இந்தியச் சிற்பிகள் பலர் தமிழகத்திற்கும் வந்துள்ளனர். குறிப்பாக மகதநாடு, அவந்திநாடு, மராட்டியநாடு முதலிய பல நாடுகளிலிருந்து அவர்கள் வந்தனர் என்பதை மணிமேகலை அறிவிக்கின்றது. யவனர்களின் சிற்பத்திறன் இங்கு மிகதியாகப் போற்றப்பெற்றது என்பதை யவனர் இயற்றிய வினைமான் பாவை யவனத் தச்சரும் அவந்திக் கொல்லரும் என்னும் அடிகளால் நன்கறிய முடிகிறது.

**சிற்பக்கலைவுடன் அடங்குவன**

பழந்தமிழகத்தில் விளங்கிய சுவர், மதில், பதணம், இஞ்சி, அகப்பா, புரிசை, எயில் முதலிய மதில் வகைகளும், ஞாயில், சூட்டு எப்பிழை முதலிய மதில் உறுப்புகளும், எழுநிலை மாடமும்

பண்டைத் தமிழரின் சிற்பக் கலைச்சிறப்பை உணர்த்துகின்றன.

கோயிலில் ஒவ்வோரிடத்திலும் அமைக்கப்பட்டுள்ள சிற்பங்கள் சிருங்கார இரசத்தை ஊட்டக் கூடியனவாகவும், சில சிற்பங்கள் நகைச்சுவையளிப்பனவாகவும் அமைக்கப்பட்டுள்ளன. தமிழர்தம் சிற்பக் கலைத்திறனை உலகுக்கு உணர்த்தும் வகையில் சிலகோயில்களில் சிற்பங்கள் அமைந்துள்ளன. தமிழக கோயில் சிற்பங்களில் மிகுதியாகக் காணப்படுவன தெய்வத் திருவுருவங்களும், அடியார்களின் திருவுருவங்களும், மன்னர் முதலிய பெரியோர்களின் உருவங்களுமாகும். சிற்பக்கலைகள் கண்ணையுங் கருத்தையும் கவர்ந்து இன்பங்கொடுக்கும் இனிய கலைகள், அவற்றின் அழகும், அமைப்பும் எல்லோருக்கும் உணர்ச்சி கொடுத்து மகிழ்வூட்டுகின்றன. ஆனால் அவற்றில் சிறிது கருத்தூன்றிக் காண வேண்டும். சற்றுக் கலைச் சுவையும் இருக்க வேண்டும். இக்கலையுணர்வை அறிந்தவர். அழகிய கலைப் பொருள்களைக் காணுந்தோறும் மனநிறையை அடைகிறார்கள்.

**முடிவுரை**

நாட்டுப்புற இலக்கியம் உணர்த்தும் சிற்பக்கலை வடிவங்கள் என்னும் இக்கட்டுரையில் கட்டிடக்கலைக்கு அரிதாக விளங்கும் சிற்பக்கலை வரலாறு, சிற்பம் அமைக்கும் பொருள்கள், இலக்கியங்களில் சிற்பக்கலை, மண் சிற்பங்கள், சுடுமண் சிற்பங்கள், உருவம் அல்லது உருவு, பசு அல்லது பசுவு, குதிரை, வேட்டை, சுடுமண் சிற்பங்கள் உருவாக்கும் முறை, மண்பொம்மை உருவாக்கப் பயன்படும் முறைகள், கற்சிலைகள் செய்வதற்கும் மண் சிலைகள் செய்வதற்கும் உள்ள வேறுபாடு, உருவங்கள் உருவாக்கும் பொதுவான செய்திகள், கற்சிற்பங்கள், மர சிற்பங்கள், தந்தச் சிற்பங்கள் போன்ற செய்திகள் தொகுக்கப்பட்டுள்ளன.

துணை நூற்பட்டியல்

1 நாட்டுப்புறக் கலைகள் (Folk Arts)
முனைவர் கு. சந்திரன் (தொகுதி 3)

2 திவாகர நிகண்டு

3 மணிமேகலை காப்பியம்

4 புறநானூறு

5 கள ஆய்வில் சேகரித்த செய்திகள்
இக்கட்டுரையில் இடம் பெற்றுள்ளது